அரங்கமும் அமைப்பது இல்லை என்பது அரசினுடைய கொள்கை முடிவு. எனவே, அரங்கம் என்ற பெயரிலேதான் அமைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்த விவரத்தின் அடிப்படையில், எதிர்காலத்தில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிப்பதற்கு துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

88—

அங்கன்வாடி மையம்

***7564—திரு. தி. வேல்முருகன்**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், எனதிரிமங்கலம் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதிப் பங்களிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் வட்டாரம், எனதிரிமங்கலம் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், 2004 ஆம் ஆண்டு குழந்தைகள் மையம் ஒன்று தொடங்கப்பட்டு, தற்போதும் தொடர்ந்து செயல்பட்டு வருவதால், இப்பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டு 42 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. 300–க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. இந்த 300–க்கும் மேற்பட்ட கிராமங்களில், 140 அங்கன்வாடி மையங்கள்தான் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சரிபாதி கிராமங்களில், குறிப்பாக, ஆதி திராவிட மக்கள் அடர்த்தியாக வாழுகின்ற கிராமங்களில் அங்கன்வாடி மையங்கள் இல்லை. எனவே, மீதமுள்ள கிராமங்களுக்கும், குறிப்பாக, ஆதி திராவிட மக்கள் அடர்த்தியாக வாழுகின்ற இடங்களில் அங்கன்வாடி மையங்களை புதியதாக அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்– மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், பண்ருட்டி தொகுதியில் 140 குழந்தைகள் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆதி திராவிட மக்கள் அதிகமாக வாழுகின்ற இடங்களில் கூடுதலாக, அங்கன்வாடி மையங்கள் தேவைப்படின், நிச்சயமாக, இந்த அரசு பரிசீலித்து, அங்கன்வாடி மையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 140 அங்கன்வாடி மையங்களில், 120 அங்கன்வாடி மையங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 20 அங்கன்வாடி மையங்கள் பல்வேறு இக்கட்டான இட சூழலில் இயங்குகின்றன. பச்சைக் குழந்தைகள், குறிப்பாக, மழலைச் செல்வங்கள் இந்த ஊட்டச்சத்து மையங்களிலே இருக்கின்றார்கள். அந்தக் கட்டடங்களை மழைக் காலங்களில் ஒழுகாமல்,*

பாதுகாக்கின்ற வகையில், துறைரீதியாக கட்டடங்கள் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா?

அதேபோன்று, தமிழ்நாடு முழுவதும் எத்தனை அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன? அவற்றில், எத்தனை அங்கன்வாடி மையங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன? மீதம் இருக்கின்ற அங்கன்வாடி மையங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் சிறப்பு நிதியைப் பெற்று, சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? குறிப்பாக, குழந்தைச் செல்வங்களுக்கு பாதுகாப்பான இடம் வேண்டும். ஏனென்றால், அவர்கள் மழலைகள். மேலும், மாற்றுத் திறனாளி குழந்தைகள் செல்வதற்கு சில அங்கன்வாடி மையங்களில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. Smart class உடன் வகுப்பறைகள் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் இதுபோன்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, இந்தக் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய அங்கன்வாடிக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 54,439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் சில இடங்களில் குறைவாக, 2, 3 குழந்தைகள் இருக்கிற இடங்களில் குழந்தைகளின் எண்ணிக்கையை உயர்த்தி மாற்றியமைத்திடவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதுமட்டுமல்லாமல், இதுவரை மொத்த குழந்தைகள் மையங்களான 54,439—ல், 7,441 மையங்கள் தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. அந்த மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் அமைத்திட, நம்முடைய ஊரக வளர்ச்சித் துறைமூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசுச் செயலாளர் அவர்களிடமும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களிடமும் வேண்டுகோள் வைத்திருக்கிறோம். நிச்சயமாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, ஒன்றிய நிதி, மகாத்மா காந்தி

2022 ஏப்ரல் 11]

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின்மூலம் விரைவாக அவற்றிற்குக் கட்டடங்கள் அமைத்திடவும், பராமரிப்பு செய்திடவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஒட்டுமொத்தமாக, குழந்தைகளின் நலனுக்காக குறிப்பாக, குழந்தை நேய தமிழகமாக மாற்றிட வேண்டுமென்ற எண்ணத்தில் பணியாற்ற எங்களுக்கு உத்தரவிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அவை எல்லாம் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் விளக்கம் சொல்லிவிட்டார்களே!*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட புளியமங்கலம் ஆதி திராவிடர் காலனியில் வசிக்கும் சுமார் 35 குழந்தைகள் ஒரு கிலோ மீட்டர் தூரமுள்ள கிராம அங்கன்வாடி மையத்திற்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. தொலைதூரம் உள்ளதால், அந்தக் குழந்தைகளுக்கு உணவு கொண்டு வந்து காலனியில் கொடுக்கப்படுகிறது. தற்போது புளியமங்கலம் ஆதி திராவிடர் காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிமூலம் கட்டடம் கட்டப்பட்டு தயாராக இருக்கிறது. ஆகவே, 35 ஆதி திராவிடர் குழந்தைகளின் நலன் கருதி, அங்கன்வாடி மையம் ஒன்றைத் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் தொகுதி, புளியமங்கலம் ஊராட்சியில் ஆதி திராவிடர் குடியிருப்பில் 35 குழந்தைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார். நிச்சயமாக அங்கன்வாடி மையம் உறுதியாக அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*